1979 அக்டோபர் 30]

(முற்பகல் 9–10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்லவேண்டியிருந்தால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: விவாதம் வரும்போது சொல்கிறேன்.

This is only an amendment to the existing Industrial Disputes Act –an addition to the I.D.Act – Section 10(b) அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1979 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ் நாடு திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## (2) தகவல் கோரல்

### காவலர்களது போராட்டம் குறித்து.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அமைச்சரவை யின் கொள்கையைக் கண்டிக்கிற தீர்மானம் இங்கே மொழியப் பட்டு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் தங்களுடைய மேலான கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். 26-ம் தேதி நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் தாங்களும், அவை முன்னவர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களும் கூடி கலந்து பேசி 27, 29, 30 ஆகிய இந்த மூன்று நாட்களுக்குள் இந்தக் கண்டனத் தீர்மானத்தின் மீதான விவாதத்தை முடித்துவிட்டு அதற்குரிய பதிலை முதல் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள், அதன் பிறகு கண்டனத் தீர்மானம் பற்றிய முடிவு, வோட்டெடுப்புகள் நடைபெறும் என்றளவில் தான் அன்று நாம் பேசி முடித்தோம். அலுவல் ஆய்வுக் குழுவில் எங்களுக்கிருக்கிற சங்கடமெல்லாம்—எங்களுக்கு மாத்திரமல்ல, உங்களுக்கும் கூடத்தான், அவை முன்னவர் அவர்களுக்கும் கூட இருப்பதாக

நான் உணருகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவிற்கு பொதுவாக, கடந்த காலங்களில் திரு. பக்தவத்சலம் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோதும், அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோதும், நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த போதும் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டங்களுக்குச் செல்வது என்பதை ஒரு மரபாக அல்லது முறையாக வைத்திருந்தோம். ஏனென்றால், அது அலுவல் ஆய்வுக் குழுவிற்கு வருகிற கட்சிகளையெல்லாம் மதிக்க வேண்டும் என்பதற்காகக் கூட அல்ல, அவரவர்கள் நிகழ்ச்சி நிரல்கள் எப்படி எப்படி அமைந்திருக்கின்றன, எனவே எந்தெந்த தீர்மானங்கள் அல்லது எந்தெந்த மானியங்கள் அல்லது எந்தெந்தப் பொருள்கள்பற்றி விவாதத்திற்கு என்றைக்கு எடுத்துக் கொள்ளலாம். அப்போது முதல் அமைச்சர் அவர்கள் 'அவைலபிளாக' இருந்து பதில் சொல்ல தேவையான நேரம் ஒதுக்கவேண்டும் என்பதற்கேற்ப அவரவர்கள் நிகழ்ச்சிக் குறிப்பு களை அறிந்து அலுவல்களை நாம் முறைப்படுத்திக்கொள்வது வழக்கம். அதற்காகத்தான் முதல் அமைச்சர் அவர்களும் அந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு வருவது வழக்கம்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ஆனால் கடந்த இரண்டரை ஆண்டுக் காலமாக எதிர்கட்சிகளுக் குள்ள துர்ப்பாக்கியம் முதல் அமைச்சர் அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு வருவதேயில்லை. அவர் வராத காரணத் தால் தாங்கள் அல்லது அவை முன்னவரால் எங்கள் முன்னால் எடுக்கிற முடிவுகளை நாங்கள் மதிக்க மறுப்பவர்கள் என்று பொருள் அல்ல. ஆன்றால் எடுக்கிற முடிவுகள் இன்றைக்கு நிறை வேற்றப்படுகிறதா என்றால் இல்லை. இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் நிகழ்ச்சி நிரல்கள் ஏதாவது ஒழுங்காக குறிப்பிட்டபடி, குறிப்பிட்ட காலத்தில் நடைபெற்றிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை என்பதைத் தாங்களும் அறிவீர்கள், அவை முன்னவர் அவர்களும் அறிவார்கள். கட்சித் தலைவர்களும் அறிவார்கள். 30-ம் தேதி அன்று முடித்துவிடலாம் என்று முடிவு எடுத்துக் கொண்டதற்குக் காரணமே, நான் என்னுடைய டயரியைப் பார்த்து எனக்கிருக்கிற அலுவல்களை எடுத்துக் கூறினேன். பொதுக் கூட்டம் என்றால் வேண்டுமானால் அதை ரத்து செய்து விடலாம். ஆனால் ஒரு திருமண நிகழ்ச்சிக்கு, திருவண்ணா மலைக்கு 2-ம் தேதி எனது உறவினர் வீட்டுத் திருமணத்திற்கு செல்ல வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டேன். 30-ம் தேதி அன்றே முடித்து விடலாம் என்று சொன்ன உறுதியின் பேரில் இன்றைக்கு இந்த விவாதம் முடியும் என்று தயாராகிக் கொண்ட நிலையில் இருந்தேன். ஆனால், நேற்றைய தினம் தங்களுடைய ஆணைப்படிஅல்லது அவை முன்னவருடைய ஆணை என்று கூற மாட்டேன். வேண்டுகோள் என்று கூற மாட்டேன், அறி வித்திருக்கிறபடி இப்போது 3-ம் தேதிக்கு இது மாற்றப்பட்டிருக்

*1979 அக்டோபர் 30]* [திரு. மு. கருணாநிதி]

கிறது. இது வாடிக்கைதான். வழக்கமாக நடைபெறுவதுதான் 30-ம் தேதி அன்று முடித்திருக்க வேண்டிய விவாதம் 3-ம் தேதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இதை முதல் அமைச்சரே அவர்கள் நேரிலே ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு வந்து அன்றே தெரிவித் திருப்பார்களேயானால், அல்லது தான் வர இயலாது என்று தெரிவித்திருப்பார்களேயானால் அல்லது தாங்களோ அல்லது அவை முன்னவரோ முதல் அமைச்சருடன் தொடர்பு கொண்டு 30-ம் தேதி அன்று விவாதம் முடிவடையாது என்று தெரிவித் திருந்தால் இந்தச் சிக்கல் ஏற்பட்டிருக்காது. எப்படியோ ஏற்பட்டு விட்டது. எனவே நடந்ததைப்பற்றி இன்று மேலும் ஆய்ந்து கொண்டு இருக்க விரும்பவில்லை. இனிமேல் இவ்விதம் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் இதைப் பற்றி நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 3-ம் தேதி வரை சில முக்கியமான பிரச்சினைகள், அதற்கு இங்கே கிடைக்க வேண்டிய விளக்கங்கள், தெளிவுரைகள் கிடைக்காமல் இந்த மன்ற உறுப்பினர்கள் மிகவும் சங்கடத்திற்கு ஆளாகியிருக்கிறார் கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு மூன்று நாட்களாக ஆசிரியர்களுடைய போராட்டம், போலீஸ்காரர்களுடைய போராட்டம், பள்ளிப் பாளையத்தில் தொழிலாளர்களுடைய போராட்டம், இவை களைப்பற்றி யெல்லாம் எந்தவிதமான தகவலும் கிடைப்ப தில்லை. தகவல் கேட்கும் போது, கண்டனத் தீர்மானத்திற் கான பதில் சொல்லும்போது பதில் தரப்படும் என்று சொல்லப் படுகிறது. 'பம்பாய் மெயில்' நாடகத்தில் கதாநாயகன் எல்லா வற்றுக்கும் காலம் வரும் பதில் சொல்லுவேன், காலம் வரும் பதில் சொல்லுவேன் என்று ஒவ்வொரு காட்சியிலும் சொல்லிக் கொண்டேயிருப்பான். அது போல் மூன்றாம் தேதி முதலமைச்சர் பதில் சொல்லுவார், பதில் சொல்லுவார் என்று நமது பேரவை முன்னவர் அவர்கள், புன்னகை புரிந்தவாறு பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். 3-ம் தேதி வரை பொறுத்திருக்க முடியாத வாறு இன்று பல்வேறு நிகழ்ச்சிகள் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. போலீஸ் போராட்டத்தின் காரணமாக பஸ்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்திகள் வந்து கொண் டிருக்கின்றன. இந்த முறைகள் வன்முறைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தால் அவை எங்கு கொண்டு போய்விடும் என்பதை நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம், அதே நேரத் தில் சட்டம் ஒழுங்கு அமைதி மேலும் கெட்டுவிடாமல் இருக்கவும், தமிழ்நாட்டில் அமைதியான ஒரு சூழ்நிலை இந்த அரசுக்குத் தேவை என்பதை உணர்ந்து சில விஷயங்களுக்குத் தெளிவான பதிலை அளித்தாக வேண்டும். நயினார்தாஸ், காவல் துறை சங்கத் தலைவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். சிறை யிலிருந்து அறிக்கை வருகிறது. எந்த நிலையில் இந்த அறிக்கை வருகிறது. அவரால் இந்த அறிக்கை கொடுக்கப்படவில்லை

என்று சொல்லுகிறார்கள். அவரை வெளியில் விட்டால் தான் அறிக்கை விடவில்லை என்று மறுத்து விடுவார் என்று அரசின் சார்பில் வாதாடுகிறவர், இவரை வெளியே விட்டால் தான் இந்த அறிக்கையைக் கொடுக்கவில்லை என்று சொல்லிவிடுவார் என்ற கருத்தைச் சொல்லி, அறிக்கை கொடுத்தது யார் என்கின்ற பேருண்மையை அவரை அறியாமலேயே குறிப்பிட்டிருக்கிறார். நயினார்தாஸ் இந்த நிலைமையை விளக்க வேண்டும். விளக்க முடியாத அளவில் இன்றைக்கு இருக்கிறார், ஏனென்றால் அவரைப் பார்ப்பதற்கு இன்டர்வியூ மறுக்கப்படுகிறது. உற்றார் உறவினர்களுக்குக் கூட இன்டர்வியூ மறுக்கப்பட்டிருப்பதாக செய்தி வருகிறது. செய்தியாளர்கள் பார்ப்பதற்கும் இன்டர்வியூ மறுக்கப்பட்டது. இப்படி பல்வேறு பயங்கரமான சூழ்நிலை, நிலவிக் கொண்டிருக்கும்போது, முதலமைச்சர் இறுதியில் தருவார் என்கின்ற நிலைமை இல்லாமல், அவை முன்னவர் அவர்களே இதற்கான சில விளக்கங்களை தருவது, எங்களுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் நல்லதாக இருக்கும் என்பதை சொல்லி, இதற்கான விளக்கங்களை சொல்லுவார்கள் என்று அவரிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஒன்று விடாமல் அப்படியே தொகுத்து இந்த அவையில் தந்து விட்டு பழைய விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்க விரும்பவில்லை என்றும் சொல்லி, சொல்ல வேண்டியவைகள் அனைத்தையும் சொல்லிவிட்டு, சாட்டப்பட வேண்டிய குற்றச்சாட்டுக்களையும் எங்கள் மீது போட்டு விட்டு, விளக்கங்களையும் கேட்டு விட்டு நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உட்கார்ந்து இருக்கிறார்—புன்னகை பூத்துக் கொண்டல்ல—கொஞ்சம் சீரியஸாக, அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல் 29-ம் தேதியோடு இதை முடிப்பது, அப்படி முடிக்க முடியாமல் போனால் 30-ம் தேதி முடிப்பது என்று தற்காலிகமாக எல்லா கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் நிர்ணயித்தது உண்மை. 29-ம் தேதி நான் எதிர்கட்சித் தலைவர் அவர்களோடு தொடர்பு கொண்டு இன்றைக்கு முடித்துவிடலாம் என்று நான் கருதுகிறேன். நீங்களும் இன்றைக்கு 12-30 மணிக்கு காலையில் பேசுங்கள், நண்பகலுக்குப் பிறகு பதில் பேசுகின்ற முதலமைச்சர் அவர்கள் பேசிவிட்டு, அதற்குப் பிறகு வாய்ப்புகள் தேவைப்பட்டால் எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், அதற்குப் பிறகு தேவையானால் விளக்கம் தருவதற்கான வாய்ப்பு கிடைக்குமானால், முதலமைச்சர் அவர்கள் பேசுவார்கள் என்று சொன்னபோது, ஒரு நியாயமான கருத்தைச் சொன்னார்கள்.